





# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








சனி ❖ ஜூலை. 01, 2023 புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 267 ❖ ரூ.10


## கரூரில் விதிகள் மீறிய 12 கல்குவாரிகளுக்கு ரூ.44.65 கோடி

# அபராதம்

## ஸ்ரீரங்கம் தொகுதி திமுக எம்எல்ஏ எம்.பழனியாண்டிக்கு சொந்தமான கல்குவாரிக்கு மட்டும் ரூ.23.54 கோடி விதித்தது மாவட்ட நிர்வாகம்

**கரூர், ஜூலை. 01-**

**கரூர் மாவட்டத்தில் விதிகளை மீறிய 12 கல்குவாரிகளுக்கு ரூ.44.65 கோடி அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இதில் ஸ்ரீரங்கம் திமுக எம்எல்ஏ பழனியாண்டி கல்குவாரிக்கு ரூ.23.54 கோடி அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.**



இது குறித்து கரூர் மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: ''கரூர் மாவட்டத்தில் தற்போது பட்டா நிலங்களில் 76 சாதாரண கல்குவாரிகளுக்கும், அரசு புறம்போக்கு நிலங்களில் 3 கல்குவாரிகளுக்கும் குவாரி குத்தகை உரிமம் வழங்கப்பட்டு நடப்பில் உள்ளது. இவற்றில் பட்டா நிலத்தில் வழங்கப்பட்ட 12 குவாரிகள் முறையான அனுமதி பெற்றிருந்தும் தற்போது இயக்கத்தில் இல்லை. புவியியல் மற்றும் சுரங்கத்துறை அலுவலர்களின் ஆய்வின் போது விதி மீறல்கள் கண்டறியப்பட்டால் அபராத நடவடிக்கைக்காக கோட்டாட்சியர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது.

கரூர் மாவட்டத்தில் குத்தகை நடப்பில் உள்ள கல்குவாரிகளில் விதி மீறல்கள் ஏதும் நடைபெற்றுள்ளதா என்பதை கண்டறிய மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் கோட்டாட்சியர்கள் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை உதவி இயக்குநர், சம்பந்தப்பட்ட வட்டாட்சியர், காவல் ஆய்வாளர் ஆகிய அலுவலர்கள் அடங்கிய குழு அமைத்து இதுவரை 42 குவாரிகளில் கூட்டுபுலத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு விதி மீறல்கள் கண்டறியப்பட்ட குவாரிகளுக்கு அபராதம் விதிக்க கோட்டாட்சியர்களுக்கு அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதுவரை 12 குவாரிகளுக்கு ரூ.44,65,28,357 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மேலும் 30 குவாரிகளுக்கு அபராதம் விதிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கரூர் மாவட்டம் குளித்தலை அருகேயுள்ள சிவாயத்தில் உள்ளது. ஸ்ரீரங்கம் தொகுதி திமுக எம்எல்ஏ எம்.பழனியாண்டிக்கு சொந்தமான கல்குவாரி கரூர் மாவட்டம் குளித்தலை அருகேயுள்ள சிவாயத்தில் உள்ளது. இங்கு விதிகளை மீறி 5,36,250 கன மீட்டர் சாதாரண கற்கள் வெட்டியெடுக்கப்பட்டதாகக் கூறி 12 குவாரிகளில் அதிகபட்சமாக இவரது குவாரிக்கு ரூ.23.54 கோடி அபராதம் விதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

அதே பகுதியில் உள்ள க.சிலம்பரசன் கல் குவாரியில் விதிகளை மீறி 1,96,289 கன மீட்டர் சாதாரண கற்கள் வெட்டி எடுத்தாகக்கூறி ரூ.8,61,71,621, பவித்ரத்தில் உள்ள பாலா ப்ளூமெட்டலில் விதிகளை மீறி 1,47,200 கன மீட்டர் சாதாரண கற்களை வெட்டி எடுத்ததாகக்கூறி ரூ.6,46,21,076, முன்னூர் விஆர்ஜி ப்ளூமெட்டல்ஸில் விதிகளை மீறி 33,960 கன மீட்டர் கிராவல் மற்றும் 2,59,650 கன மீட்டர் சாதாரண கற்கள் வெட்டி எடுத்தாகக்கூறி ரூ.2,06,60,988, புன்னத்தில் உள்ள விஎஸ்டி ப்ளூ மெட்டல்ஸில் விதிகளை மீறி 5,070 கன மீட்டர் கிராவல் மற்றும் 28,719 கன மீட்டர் சாதாரண கற்கள் வெட்டி எடுத்தாகக்கூறி ரூ.1.35,82,390 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், நடந்தை பொன்சங்கர் பில்டிங் மெட்டீரியல்ஸ் சப்ளையர்ஸ் நிறுவனத்திற்கு ரூ.86,40,110, தென்னிலையில் சா.கந்தசாமி கல்குவாரிக்கு ரூ.40,87,690, பி.அணைப்பாளையம் ரவி ப்ளூமெட்டல்ஸிற்கு ரூ.38,06,477, புஞ்சைகாளகுறிச்சியில் ரா.பார்த்திபன் கல்குவாரிக்கு ரூ.36,40,493, குப்பம் என்டிசி இன்ப்ரா ப்ராஜெக்ட் பிரைவேட் லிமிடெட்டிற்கு ரூ.31,36,984, தென்னிலை சக்திப்ளூமெட்டல்ஸிற்கு ரூ.15,80,422, அப்பிபாளையம் சு.விஜயலட்சுமி கல்குவாரிக்கு ரூ.11,85,600 அபராதமாக விதிக்கப்பட்டு உள்ளதாக மாவட்ட நிர்வாகம் நேற்று (ஜூன் 30ம் தேதி) வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.



▶ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை நேற்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள சிவ் தாஸ் மீனா, சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



▶ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை நேற்று தலைமைச் செயலகத்தில், காவல்துறை தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ள சங்கர் ஜிவால், சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



▶ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை தலைமைச் செயலகத்தில், நேற்று சென்னை பெருநகர காவல் ஆணையராக நியமிக்கப்பட்டுள்ள சந்தீப் ராய் ரத்தோர், சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### செந்தில் பாலாஜி விவகாரம்

## ஆளுநரின் முடிவை தமிழக அரசு முற்றிலுமாக நிராகரிக்கிறது: அமைச்சர் தங்கம் தென்னரசு

**சென்னை, ஜூலை. 01-**

அமைச்சர் செந்தில் பாலாஜி விவகாரத்தில் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று அவசர கதியில் ஆளுநர் ஆர்.என்.ரவி எடுத்துள்ள முடிவை, தமிழக அரசு முற்றிலுமாக நிராகரிப்பதாக நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

அமைச்சர் பதவியில் இருந்து செந்தில் பாலாஜி நீக்கப்படுவதாக ஆளுநர் மாளிகையில் இருந்து நேற்றிரவு அறிக்கை வெளியிடப்பட்டது. அமைச்சர் பதவியில் இருந்து செந்தில் பாலாஜி நீக்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட சில மணி நேரங்களில் அந்த நடவடிக்கை நிறுத்தி வைக்கப்படுவதாக ஆளுநர் தரப்பில் அறிவிக்கப்பட்டது. இது தொடர்பாக முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு ஆளுநர் கடிதம் அனுப்பி இருந்தார்.



இந்நிலையில், கடிதம் தொடர்பாக, ஆளுநருக்கு, முதல்வர் கடிதம் எழுத உள்ளதாக அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார். இது தொடர்பாக அமைச்சர் தங்கம் தென்னரசு அளித்த பேட்டியில், "அமைச்சர் செந்தில் பாலாஜி விவகாரம் தொடர்பாக ஆளுநருக்கு, முதல்வர் கடிதம் அனுப்ப உள்ளார். அமைச்சர் செந்தில் பாலாஜியை பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் ஆளுநருக்கு இல்லை. அமைச்சரை சேர்ப்பது மற்றும் நீக்குவது முதல்வரின் தனிப்பட்ட அதிகாரம். இதை தெளிவுபடுத்தி முதல்வர், ஆளுநருக்கு கடிதம் எழுத உள்ளார். தெளிவான விளக்கம் அளித்து முதல்வர் கடிதம் எழுத உள்ளார். எடுத்தேன் கவிழ்த்தேன் என்று அவசர கதியில் ஆளுநர் ஆர்.என். ரவி எடுத்துள்ள முடிவை, தமிழக அரசு முற்றிலுமாக நிராகரிக்கிறது.

அமைச்சர்கள் விஷயத்தில் ஆளுநருக்கு எந்த அதிகாரமும் இல்லை என்று தமிழக அரசின் சார்பில் தெளிவுபடுத்துகிறோம். உச்சநீதிமன்றம் இது குறித்து தெளிவான தீர்ப்பை வழங்கி உள்ளது. முதல்வரின் பரிந்துரை இல்லாமல் ஆளுநர் எதுவும் செய்ய முடியாது என்று தெரிந்தும் ஆளுநர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார். முதல்வருக்கு அரசியல் அமைப்பு சட்டம் அளித்த உரிமையை ஆளுநர் மீறி உள்ளார். மீண்டும், மீண்டும் ஆளுநர் பிரச்சனையை உருவாக்குகிறார்." இவ்வாறு அவர் கூறினார்.

## புதுக்கோட்டை கம்பன் கழகத்தின் கம்பன் பெருவிழா அழைப்பிதழ் வெளியிடப்பட்டது



**புதுக்கோட்டை, ஜூலை. 01-**

புதுக்கோட்டை கம்பன் கழகத்தின் 48 ஆம் ஆண்டு கம்பன் பெருவிழா அழைப்பிதழ் வெளியிடப்பட்டது. இந்த விழாவில் தமிழக ஆளுநர் உள்ளிட்டோர் பங்கேற்று சிறப்பிக்க இருக்கிறார்கள்.

புதுக்கோட்டை கம்பன் கழகத்தின் 48 ஆம் ஆண்டு கம்பன் பெருவிழா இம்மாதம் 14ஆம் தேதி தொடங்கி 23 வரை 10 நாட்கள் நகர்மன்றத்தில் நடைபெறுகிறது.

இப்பெருவிழாவின் தொடக்க நாளில் அமெரிக்க ஜனநாயகக் கட்சியின் பொறுப்பாட்சியர் டாக்டர் ராஜன் நடராஜன் தலைமை ஏற்றுச் சிறப்பிக்கிறார். நாடாளுமன்றஉறுப்பினர் முனைவர் தொல். திருமாவளவன் எழுச்சி உரையாற்றுகிறார். கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் இரண்டு நாட்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகிறார். பாரதி பாஸ்கர் பட்டிமன்ற நடுவராகப் பொறுப்பு ஏற்கிறார்.

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி கலந்து கொண்டு நிறைவு விழாப் பேருரையாற்றுகிறார். இந்த விழாவுக்கான அழைப்பிதழை கம்பன் கழகத் தலைவர் எஸ். ராமச்சந்திரன் வெளியிட புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். வை.முத்துராஜா பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் கம்பன் கழகச்செயலாளர் ரா. சம்பத்குமார், துணைத் தலைவர் எம். ஆர்.எம்.முருகப்பன், துணைப் பொருளாளர் கறு.ராமசாமி, கூடுதல் செயலாளர் பாரதி, இணைச்செயலாளர்கள் முனைவர் முருகையன், காடுவெட்டி குமார் மற்றும் விழாக் குழு உறுப்பினர்கள் பேராசிரியர் ரவிச்சந்திரன், முனைவர் மாரியப்பன், கவிஞர் நிலவை பழனியப்பன், அனுராதா சீனிவாசன், காசி ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மாமல்லபுரத்தில் 6.79 ஏக்கரில் புதிய பேருந்து நிலையம்: அமைச்சர் சேகர்பாபு தகவல்

**சென்னை, ஜூலை. 01-**

மாமல்லபுரத்தில் 6.79 ஏக்கரில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படவுள்ளதாக அமைச்சர் சேகர்பாபு தெரிவித்தார்.

மாமல்லபுரத்தில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்குழுமம்சார்பில் கட்டப்படவுள்ள புதிய பேருந்து நிலையத்திற்கான இடத்தினை அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன் மற்றும் பி.கே.சேகர்பாபு ஆய்வு செய்தனர். இதனைத் தொடர்ந்து அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் கூறுகையில், "மாமல்லபுரத்தில் அமையவிருக்கின்ற இந்த பேருந்து நிலையத்தில் 6.79 ஏக்கர் நிலப்பரப்பில் 1 லட்சத்துக்கும் மேற்பட்ட சதுர அடியில் 50 பேருந்துகள் ஒரே நேரத்தில் நிற்கக் கூடிய அளவுக்கு வடிவமைக்கப் படவிருக்கிறது. இந்தப் பேருந்து நிலையம் வரபெற்றால் மாமல்லபுரத்தில் ஏற்கெனவே இருக்கின்ற பழைய பேருந்து நிலையத்தில் போக்குவரத்து நெரிசல் கட்டுப்படுத்தப்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.



மாமல்லபுரத்தில் தற்போதுள்ள பேருந்து நிலையம் 0.31 ஏக்கர் பரப்பளவில், 10 பேருந்துகளை நிறுத்தும் திறன் கொண்டது. சென்னைப் பெருநகரப் போக்குவரத்துக் கழகம் (MTC) மற்றும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (TNSTC - விழுப்புரம் மண்டலம்) மாமல்லபுரத்தில் இருக்கும் பேருந்து நிலையத்தில் இருந்து திருத்தணி, தாம்பரம், செங்கல்பட்டு, கல்பாக்கம், திருப்போரூர், கோயம்பேடு மற்றும் திருவான்மியூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்குத் தங்கள் பேருந்துகளை இயக்குகின்றன. தற்போதுள்ள பேருந்து நிலையம் உள்ள இடத்தில் போதிய இடவசதி இல்லாததால், கிழக்கு கடற்கரை சாலை மற்றும் திருக்கழுக்குன்றம் சாலை அருகாமையில் புதிய பேருந்து நிலையம் அமைக்க முன்மொழியப்பட்டது.

புதிதாக அமையவிருக்கின்ற இந்தப் பேருந்து நிலையத்தில் முன்பதிவு மையம், தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம், சுற்றுலா தகவல் மையம், மருந்தகம், தாய்மார்கள் பாலூட்டும் அறை, பணியாளர்கள் தங்கும் விடுதி, பயணிகள் ஓய்விடம், வாகன நிறுத்துமிடம் உள்ளிட்ட வசதிகளைக் கொண்டதாக அமையும். ஆகவே, இந்தப் பேருந்து நிலையத்தை விரைவாக இந்தபகுதியில் கொண்டு வருவதற்கு உண்டான அனைத்து மேம்பாட்டு பணிகளையும் விரைவுபடுத்த திட்டமிட்டிருக்கின்றோம். இதோடு மட்டுமல்லாமல் கிளாம்பாக்கம், குத்தம்பாக்கம் மற்றும் செங்கல்பட்டு ஆகிய பகுதிகளில் புதிய பேருந்து நிலையங்களும், முடிச்சூர் பகுதியில் ஆம்னி பேருந்துகள் நிறுத்துவதற்குண்டான பேருந்து நிலையமும் அமைப்பதற்குண்டான திட்டங்கள் வகுக்கப் பட்டிருக்கின்றன.

இந்த ஆட்சி காலத்தில், புதிய பேருந்து நிலையங்களும், ஏற்கெனவே தொடங்கப்பட்டு பணியில் மந்தமாக இருந்த பேருந்து நிலையங்களையும் விரைவுபடுத்துகின்ற பணிகளையும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், மாமல்லபுரத்தை துணைக்கோள் நகரமாக்கும் பணியும் நடைபெற்று கொண்டுள்ளது" என்று அமைச்சர் சேகர்பாபு கூறினார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# பணி ஓய்வு பெறும் தலைமைச்செயலாளர் மற்றும் டிஜிபிக்கு முதல்வர் வாழ்த்து



சென்னை, ஜூலை.1–

தமிழக அரசு தலைமை செயலாளராக செயல்பட்டு வந்த இறையன்பு நேற்றுடன் பணி ஓய்வு பெற்றார். அதே போல, தமிழக டிஜிபியாக கடந்த இரண்டு ஆண்டுகளாக பணியாற்றி வந்த சைலேந்திரபாபுவும் நேற்று பணி ஓய்வு பெற்றார். பணி ஓய்வு பெறும் இருவருக்கும் பல்வேறு தரப்பில் இருந்து வாழ்த்துக்கள் குவிந்துவருகிறது.

இந்த நிலையில், நேற்று பணி ஓய்வு பெற்ற தலைமை செயலாளர் இறையன்பு மற்றும் டி ஜி பி சைலேந்திரபாபுவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். இதற்காக இருவரையும் நேரில் அழைத்த முதல்வர், அவர்களுக்கு சால்வை அணிவித்து வாழ்த்துக்களை தெரிவித்தார்.

# திருக்கடையூரில் பாஜக 9 ஆண்டுகள் சாதனை விளக்க பொதுக்கூட்டம்– அண்ணாமலை உரையாற்றினர்



திருக்கடையூர், ஜூலை-01:

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா திருக்கடையூரில் பாரதிய ஜனதா கட்சியின் 9 ஆண்டு கால சாதனை விளக்கப்பொதுக்கூட்டம் மாவட்டத் தலைவர் அகோரம் ஏற்பாட்டில் நடைபெற்றது.

திருக்கடையூரில் திறந்த வெளி மைதானத்தில் பொதுகூட்டம் நடைபெற்றபோது திடீரென்று பெய்த மழையால் பொதுக்கூட்டத்தில் அமர்ந்திருந்த பொதுமக்கள் மழைக்கு ஒதுங்க இடம் இல்லாததால் தங்கள் இருக்கைகளை குடையாக்கி மழையில் நனையாமல் தங்களை பாதுகாத்தனர். மேலும் மேடைக்கு அடியில் ஓடிச்சென்று ஒன்டினர். அங்கு நிறுத்தியிருந்த வேனில் ஏறி தஞ்சமடைந்தனர்.

லேசாக மழை பெய்த நிலையில் பொதுக்கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக வந்த அண்ணாமலைக்கு பட்டாசு வெடி முழக்கத்துடனும் நாட்டுப்புர இசை கச்சேரியுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது. மழைநின்றநேரத்தில் பாஜக மாநில தலைவர் அண்ணாமலை பேச துவங்கியதும் ஆங்காங்கே நின்று கொண்டிருந்த கொண்டிருந்த தொண்டர்கள் பொதுமக்கள் அவரது உரையாடலை கேட்பதற்கு ஓடி வந்தனர். சிறிது நேரத்தில் மழை கொட்ட தொடங்கியது. பொதுமக்கள் நனைவதை பார்த்த அண்ணாமலை மேடையில் இருந்து வெளியேறி திறந்தவெளியில் மழையில் நனைந்தவாறு சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசுகையில்:–

மயிலாடுதுறை மண்ணின் பெருமையை செங்கோல் மூலமாக பிரதமர் இந்தியா முழுவதும் எடுத்துச் சென்றுள்ளார். 1947 இல் திருவாவடுதுறை ஆதீனம் அப்போதைய பிரதமர் நேருவிடம் வழங்கிய செங்கோலை நேரு கைத்தடி என்ற பெயரில் பயண்படுத்தி அலகாபாத் அருங்காட்சியகத்தில் செங்கோல் வைக்கப்பட்டது. தற்போது புதிய பாராளுமன்றத்தில் அதே செங்கோலை திருவாசகம் கோளறு பதிகம் தேவாரங்கள் பாடப்பட்டு ஆதீனங்கள் கைகளால் பெற்ற பிரதமர் நரேந்திர மோடி பாராளுமன்றத்தில் நிறுவி மயிலாடுதுறை மண்ணிற்கு பெருமை சேர்த்துள்ளார். இதில் மாநில பொதுச்செயலாளர் கருப்பு முருகானந்தம், உள்ளிட்ட பாஜக பிரமுகர்கள் உடனிருந்தனர்.




# அமைச்சர் செந்தில் பாலாஜி விவகாரத்தில் கவர்னர் நடந்து கொண்ட விதம் தவறு: சஞ்சய்ராவத்

சென்னை,ஜூலை.1–

தமிழக அமைச்சர் செந்தில் பாலாஜி விவகாரத்தில் கவர்னர் ஆர்.என்.ரவி நடந்து கொண்ட விதம் தவறு என சஞ்சய் ராவத் கருத்து தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத பணப்பரிமாற்றம் தொடர்பான வழக்கில் அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்டுள்ள அமைச்சர் செந்தில் பாலாஜியை தமிழக அமைச்சரவையில் இருந்து நீக்கி கவர்னர் ஆர். என்.ரவி நேற்று உத்தரவு பிறப்பித்தார். அமைச்சர் செந்தில் பாலாஜியை அமைச்சரவையில் இருந்து நீக்கிய உத்தரவுக்கு முதல்வர், அமைச்சர்கள், திமுக, காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சி, விசிக உள்பட பல்வேறு கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து அமைச்சர் செந்தில் பாலாஜியின் பதவி நீக்க உத்தரவை தமிழககவர்னர் ஆர்.என்.ரவி. நிறுத்தி வைத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளன. மேலும் பதவி நீக்க உத்தரவை நிறுத்தி வைப்பதாக முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் கவர்னர் ஆர்.என்.ரவி



தெரிவித்துள்ளதாகதகவல் வெளியாகி உள்ளது. இந்த நிலையில், செந்தில் பாலாஜியை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கிய தமிழக ஆளுநர் ஆர்.என். ரவியின் நடவடிக்கை குறித்து உத்தவ் தாக்கரே அணித் தலைவர் சஞ்சய் ராவத் கூறுகையில், இது தவறு. அரசில் இருந்து ஒருவரை நீக்குவது முதல்வரின் உரிமை. மகாராஷ்டிராவிலும், நவாப் மாலிக் மீது குற்றச்சாட்டுகள் இருந்தன, ஆனால் அவரது ராஜினாமாவை அரசாங்கம் எடுக்கவில்லை. ஆனால், தமிழக கவர்னர் ஆர். என்.ரவி நடந்து கொண்ட விதம், பகத்சிங் கோஷ்யாரியை விட ஒரு படி மேலே இருப்பது போல் தெரிகிறது. பாஜக ஆட்சி செய்யாத மாநிலங்களில் அரசியல் சட்டத்தை மீறுகிறது என தெரிவித்தார்.

# கடல் வழியாக பயங்கரவாதிகள் ஊடுருவுவதைத் தடுக்கும் வகையில் தரங்கம்பாடி கடற்பகுதிகளில் 'சாகர் கவாச்' ஆபரேஷன்



**தரங்கம்பாடி, ஜூலை–01:**

தமிழகத்தில் ஆண்டுதோறும் கடற்பகுதியில் 'சாகர் கவாச்' என்ற பாதுகாப்பு ஒத்திகைநடத்தப்படுகிறது. இதில் கடற்படை, கடலோர காவல்படை, மரைன் போலீசார், மத்திய தொழில் பாதுகாப்பு படை, கியூ பிரிவு, மத்திய–மாநில உளவுத்துறை போலீசார் உள்ளிட்ட அனைத்து பாதுகாப்புதுறையினரும் ஈடுபடுகின்றனர்.

அந்த வகையில் மயிலாடுதுறை மாவட்டத்தில் தரங்கம்பாடி மீன்பிடித் துறைமுகம் மற்றும் கடற்கரை சுற்றியுள்ள பகுதி தரங்கம்பாடி டேனிஷ் கோட்டை உள்ளிட்ட கடலோர பகுதிகளில் மயிலாடுதுறை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என். எஸ். நிஷா தலைமையில் காவல்துறை துணை கண்காணிப்பாளர் கலை கதிரவன், காவல் ஆய்வாளர்கள் புயல் பாலசந்தர், சிங்காரவேல் ஆகியோர் மீன்பிடி துறைமுகத்தில் படகுகள் மூலம் கடலுக்குள் சென்று தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர். மேலும், கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களிடம், அடையாளம் தெரியாத படகுகள் வந்தால் உடனடியாக தகவல் தரவேண்டும் என்றும் காவல்படையினர் அறிவுறுத்தினர்.

# தமிழக அரசின் புதிய தலைமைச் செயலாளராக சிவ்தாஸ் மீனா பொறுப்பேற்றார்

சென்னை,ஜூலை.1–

தமிழக அரசின் புதிய தலைமைச் செயலாளராக சிவ்தாஸ் மீனா பொறுப்பேற்றுக் கொண்டார்.

2021–ம் ஆண்டு சட்டசபைதேர்தலில்திமுக வெற்றி பெற்றதையடுத்து, மே 7–ம் தேதி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்றார். அன்றே மாநில தலைமைச் செயலாளராக வெ.இறையன்பு நியமிக்கப்பட்டார். இரண்டு ஆண்டுகள் வெ.இறையன்பு தமிழக அரசின் தலைமைச் செயலராகப்பணியாற்றிய நிலையில் இன்றுடன் அவர் ஓய்வு பெறுகிறார்.

இந்நிலையில் தமிழகத்தின் அடுத்த தலைமைச் செயலர் யார் என்ற எதிர்பார்ப்பு நிலவி வந்தது. இந்த நிலையில் தமிழகத்தின் புதிய தலைமைச்செயலாளராக சிவ்தாஸ் மீனா நியமிக்கப்பட்டு உள்ளதாக தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு நேற்று முந்தினம் உத்தரவு பிறப்பித்தார் .தமிழ்நாட்டின் 49வது தலைமைச்செயலாளராக சிவ்தாஸ் மீனா நியமிக்கப்பட்டு உள்ளார். இந்த நிலையில் தமிழக அரசின் புதிய தலைமை



செயலாளராக சிவ்தாஸ் மீனா பொறுப்பேற்றுக் கொண்டார்.தலைமை செயலாளர் சிவ்தாஸ் மீனாவிடம்பொறுப்புகளை இறையன்புஒப்படைத்தார்.

ராஜஸ்தான் மாநிலத்தை பூர்வீகமாகக் கொண்ட சிவ்தாஸ் மீனா, 1964ஆம்ஆண்டுஅக்டோபர் மாதம்5ஆம்தேதிபிறந்தவர். ஜெய்ப்பூரில் உள்ள மாளவியா பொறியியல் கல்லூரியில் சிவில் என்ஜினியரிங் துறையில் பட்டம் பெற்றார். அதன்பின் ஜப்பானில் சர்வதேச ஆய்வுகளில் முதுகலைப் பட்டம் பெற்றார். சிவ்தாஸ் மீனா ராஜஸ்தானி, தமிழ், ஆங்கிலம், இந்தி, ஜப்பானிய மொழிகளை கற்றுள்ளார். 1989ஆம் ஆண்டு ஐஏஎஸ் தேர்ச்சி பெற்று, தமிழ்நாடு கேடரில் ஐஏஎஸ் அதிகாரியாக சிவ்தாஸ் மீனா பணியில்சேர்ந்தார். காஞ்சிபுரத்தில் உதவி கலெக்டராக பயிற்சியை தொடங்கிய சிவ்தாஸ் மீனா, கோவில்பட்டி உதவி கலெக்டர், வேலூர் கூடுதல் கலெக்டர், மாவட்ட கலெக்டர் என படிப்படியாகபணி உயர்வு பெற்றார்.

ஊரக வளர்ச்சித் துறை, நில நிர்வாகத்துறை, போக்குவரத்துத் துறை என பல்வேறு துறைகளில் சிறப்பாக பணியாற்றி இருக்கிறார். கூட்டுறவு, உணவு மற்றும்நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் முதன்மைச் செயலாளர் உள்பட பல முக்கிய பதவிகளை சிவ்தாஸ் மீனா வகித்துள்ளார். 30 ஆண்டுகள் ஐஏஎஸ் பணி அனுபவம் கொண்டவர். இவர் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 4 தனிச் செயலாளர்களில் ஒருவராக இருந்தவர். ராஜஸ்தான் மாநிலத்தை சேர்ந்தவர் என்றாலும், தமிழ்நாடு கேடரில் இருக்கும் அதிகாரிகளில் மிகவும் சீனியர். நெருக்கடியான சூழலில் திறமையாக செயல்படக் கூடியவர் என்ற நற்பெயர் பெற்றிருக்கிறார். நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறையின் கூடுதல் தலைமைச்செயலாளராக பணியாற்றி வந்த சிவ்தாஸ் மீனா தமிழ்நாடு அரசின் தலைமைச்செயலாளராக அரசு நியமிக்கப்பட்டு உள்ளார்.

### தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீராக உள்ளது

# டி.ஜி.பி.யாக பொறுப்பேற்ற பிறகு சங்கர் ஜிவால் பேட்டி

சென்னை,ஜூலை.1–

தமிழகத்தில் சட்டம் ஒழுங்குசீராகஉள்ளதுஎன்று டி.ஜி.பி.யாக பொறுப்பேற்ற பிறகு சங்கர் ஜிவால் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டின் சட்டம்–ஒழுங்கு டி.ஜி.பி.யாக கடந்த 2 ஆண்டுகள் சைலேந்திரபாபு திறம்பட பணியாற்றி வந்தார். அவர் நேற்று பணியில் இருந்து ஓய்வு பெற்றார்,. இதையடுத்துபுதியபோலீஸ் டி.ஜி.பி.யாக சென்னை போலீஸ் கமிஷனர் சங்கர் ஜிவால்நியமிக்கப்பட்டார். இந்த நிலையில் தற்போது தமிழகத்தின் புதிய சட்டம் ஒழுங்கு டி.ஜி.பி.யாக சங்கர் ஜிவால் பதவியேற்றுக் கொண்டார்.

சங்கர் ஜிவாலிடம் முழு பொறுப்பையும் சைலேந்திரபாபு ஒப்படைத்தார்,இதையடுத்து தமிழ்நாட்டின் புதிய டி.ஜி. பி.யாக பதவியேற்ற சங்கர் ஜிவால்செய்தியாளர்களைச் சந்தித்தார், அப்போது அவர் கூறியதாவது, பொதுமக்களின் கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்பட்டு உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களின் குறைகளை கேட்டு நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். கடந்த இரண்டு ஆண்டுகளில் சாலை விபத்துக்களில் மரணங்கள் குறைந்துள்ளது. அதனை மேலும் குறைக்க நடவடிக்கைஎடுக்கப்படும்.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீராக உள்ளது, காவலர்களின் நலன் கருதி சில திட்டங்களை கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும், மேலும் காவல்துறையை இன்னும் மேம்படுத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்டும்.சென்னையில் அமல்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் பிற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். கள்ளச்சாராய விற்பனையாளர்கள், ரவுடிகள் ஒடுக்கப்படுவார்கள், இவ்வாறு கூறினார்.

# ஆவுடையார்கோவில் அருகே பெருநாவலூர் அரசு கல்லூரியில் கழிப்பறைகள் திறப்பு விழா

ஆவுடையார்கோவில், ஜூலை.1–

ஆவுடையார்கோவில் அருகே பெருநாவலூர் அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், மாணவியர்க்கான கூடுதல் நவீன கழிப்பறைகள் திறப்பு விழா நிகழ்வு நடைபெற்றது. விழாவிற்கு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ. வீ .மெய்யநாதன் தலைமையேற்று, மாணவியருக்கான கூடுதல் நவீன கழிப்பறைகள் திறந்து வைத்து, விழாப்பேருரை ஆற்றினார்.




கல்லூரி முதல்வர் பேராசிரியர் வீ. பாலமுருகன் தொடக்கவுரையாற்றினார்.

அறந்தாங்கி மேனாள் சட்டமன்ற உறுப்பினர் உதயம் எஸ்.சண்முகம், ஐடிசி நிறுவனத்தின் பொதுமேலாளர் என்.டி .விஸ்வநாத், அறந்தாங்கி நகர்மன்றத்தலைவர் இரா. ஆனந்த், அறந்தாங்கி ஒன்றியப்பெருந்தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், கீரமங்கலம் பேரூராட்சித்தலைவர் சிவக்குமார் ஆகியோர் வாழ்த்திப்பேசினர்.

ஐடிசி நிறுவனத்தின் மேலாளர்கள் பத்மநாபன், என்.சுரேஷ் , வருணா நிறுவனத்தின் நிறுவனர் ஆனந்தகுமார், ஊராட்சி மன்றத்தலைவர்கள் கூட்டமைப்பின் தலைவர் மணிமொழியன் உள்ளிட்ட மக்கள் நலப்பிரநிதிகள் மற்றும் இருபால்பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், மாணவ, மாணவியர் பலரும் பங்கேற்றனர்.

முன்னதாகக் கல்லூரித் தமிழ்த்துறைத்தலைவர் கா.காளிதாஸ் அனைவரையும் வரவேற்றார். நிறைவாகப் தமிழ்த்துறைப் பேராசிரியர் பழனித்துரை நன்றி கூறினார், ஐடிசி நிறுவனத்தின் எஸ்.பிரான் யோகேஷ் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினர்.

விழா ஏற்பாடுகளை கல்லூரிநாட்டுநலப்பணித் திட்ட அலுவலர் ப.செந்தில்குமார் தலைமையில் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட மாணவ, மாணவியர் பலரும் செய்திருந்தனர்

# ஆளுநரின் அதிகாரத்தில் மு.க.ஸ்டாலின் இரட்டை நிலைப்பாடு– அண்ணாமலை

சென்னை,ஜூலை.1–

அதிமுக ஆட்சியில் விஜயபாஸ்கரை நீக்கம் செய்ய ஆளுநருக்கு பரிந்துரைத்தார் மு.க.ஸ்டாலின். தற்போது அமைச்சரை நீக்க ஆளுநருக்கு அதிகாரம் இல்லை என்கிறார் ஸ்டாலின்.

சென்னை விமான நிலையத்தில் பா.ஜ.க மாநில தலைவர் அண்ணாமலை செய்தியாளர்களை



சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:– அதிமுக ஆட்சியில் விஜயபாஸ்கரை நீக்கம் செய்ய ஆளுநருக்கு பரிந்துரைத்தார் மு.க.ஸ்டாலின். தற்போது அமைச்சரை நீக்க ஆளுநருக்கு அதிகாரம் இல்லை என்கிறார். இது ஆளுநர் அதிகாரத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின்இரட்டை நிலைப்பாட்டை காட்டுகிறது. செந்தில் பாலாஜி ஊழல் செய்திருப்பதாக உச்சநீதிமன்றமே சுட்டிக்காட்டியுள்ளது, இவ்வாறு அவர் கூறினார்.

# அரியலூர் அருகே பள்ளகிருஷ்ணாபுரம் கோயில் கும்பாபிஷேகம்



அரியலூர், ஜூலை.1–

அரியலூர் அருகே, பள்ளகிருஷ்ணாபுரம் கோயில் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

அரியலூர் அருகே, பள்ளகிருஷ்ணாபுரம், விநாயகபுரம் தெருவில் அமைந்துள்ள, ஸ்ரீ சித்தி விநாயகர், நாக முத்தம்மன் கோயில்களின் கும்பாபிஷேக விழா நடைபெற்றது.

கோயில் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள யாகசாலை மண்டபத்தில், விக்னேஸ்வர பூஜையுடன் துவங்கி, இரண்டு நாட்கள் நடைபெற்ற யாகசாலை பூஜைகள் நடைபெற்றது. தொடர்ந்து கோயில் விமானம் மற்றும் மூலவர்களுக்கு, வாரணவாசி – சமத்துவபுரத்தை சேர்ந்த, என். பாலகிருஷ்ணன் ஐயர் தலைமையிலான சிவாச்சாரியார்கள், கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தனர்.

கும்பாபிஷேக ஏற்பாடுகளை, கிராம நாட்டாமை சாமிக்கண்ணு, பாண்டியன், அண்ணாதுரை பூசாரி, சிற்றரசு, மற்றும் பள்ள கிருஷ்ணாபுரம் கிராமத்தில் உள்ள விநாயகபுரத்தை சேர்ந்த, பொதுமக்கள் செய்திருந்தனர்.

# வயல்வெளியில் வேலை பார்த்த பெண்களை வைத்து மின்கம்பம் நட்ட மின்வாரியம் – பொதுமக்கள் அதிர்ச்சி



சீர்காழி, ஜூலை.1–

சீர்காழியை அருகே வயல் வெளியில் வேலை பார்த்த பெண்களை கொண்டு கம்பம் நட்டு வைத்த சம்பவம் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியை அடுத்த அரசூரில் சீர்காழி கோட்டம் அரசூர் துணை மின்நிலையம் இயங்கி வருகிறது.

இங்கிருந்து சுற்றுவட்டாரபகுதிகளுக்கு மின் விநியோகம் செய்யப்பட்டுகிறது. மேலும் இந்த மின்நிலையத்தில் போதிய மின் ஊழியர்கள் இன்றி அரசூர் சுற்றுவட்டார பகுதிகள் முழுவதும் ஏற்படும் மின் பிரச்சினைகளை சரி செய்வதில் கால தாமதம் ஏற்பட்டு வருகிறது.

இதனால் விவசாய பணி, பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள், மற்றும் முதியவர்கள் சீரான மின்சாரம் இன்றி அவதிக்கு உள்ளாகி வருகின்றனர். இந்த சூழலில் அரசூர் அருகே உயர் அழுத்த மின்கம்பம் செல்லும் பாதையில் மின்கம்பம் ஒன்று வயல்வெளியில் சாய்ந்துள்ளது.

இது பல நாட்களாக ஆபத்து விளைவிக்க நிலையில் இருந்ததை அடுத்து, அதனை நிமிர்த்து வைக்கும் பணியில் மின்வாரிய ஊழியர்கள் ஈடுபட்டனர். ஆனால், போதுமான ஊழியர்களும், மின்கம்பங்களையும் நிமிர்க்க, ஜேசிபி உள்ளிட்ட எந்த ஒரு தொழில்நுட்பமும் இல்லாததால், அதனை ஊழியர்கள் கயிறு கட்டி நிமிர்த்த முயற்சித்தனர்.

இருப்பினும் மின்கம்பத்தை நிமித்த முடியாத ஊழியர்கள், அங்கு அருகில் வயல்வெளியில் வேலை செய்த பெண்மணிகளை உதவிக்கு அழைத்து மின் கம்பத்தை நிமிர்த்தி சரி செய்துள்ளனர். தற்போது அந்த வீடியோ சமூக வலைதளங்களில் மின்கட்டணத்தை உயர்த்தி அதிக லாபம் வேணுமா அரசு மின் கம்பத்தை நடுவதற்கும் அதனை நிமிர்த்துவதற்கும், ஜேசிபி உள்ளிட்ட எந்த வாகனங்களின் செலவழிக்காமல், அப்பாவி பொதுமக்களை வைத்து அதும் பெண்களைக் கொண்டு நிமிர்த்திய செயல் கண்டனத்திற்குரியது என பதிவிட்டுள்ளனர்.

தற்போது அந்த வீடியோ சமூக வலைதளங்களில் மின் அதிகாரிகளை விமர்சித்து வைரல் ஆகி வருகிறது.

# ஓட்டலில் வாய்தகராறு போலீசார், வழக்கறிஞர் தாக்கி கொண்டனர் மருத்துவ மனையில் அனுமதி

சென்னை, ஜூலை.1–

சென்னை புதுவண்ணாரப்பேட்டை. காவல் நிலையத்தில் பணிபுரிந்து வரும் காவலர்கள் வினோத், நவீன் இருவரும் நேற்று முன் தினம் இரவு புதுவண்ணாரப்பேட்டை சேனியம்மன் கோவில் தெருவில் உள்ள ஒரு பாஸ்ட்புட் உணவகத்தில் டிபன் சாப்பிட்டுக் கொண்டு இருந்தனர் வழக்கறிஞர் ஜெய் கணேஷ் என்பவர் அருகில் சாப்பிட்டு கொண்டு இருந்த போது காவலர்களுக்கும் அவருக்கும் திடீரென வாய் தகராறு ஏற்பட்டு கைகலப்பாக மாறியதில், ஒருவரை ஒருவர் கைகளால் தாக்கிக் கொண்டனர்.

இதில் இரு தரப்பினருக்கும் காயம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதனால் இரண்டு காவலர்கள் அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். வழக்கறிஞர் ஜெய்கணேஷ் இராயபுரத்தில் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்

இச்சம்பவம் குறித்து புதுவண்ணாரப்பேட்டை போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

# அரியலூரில் போதிய பராமரிப்பு இல்லாமல் கிடக்கும் சார்– ஆட்சியர் குடியிருப்பு கட்டிடம்



அரியலூர், ஜூலை.1–

அரியலூரில் பல லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட, சார்-ஆட்சியர் குடியிருப்பு கட்டிடம், போதிய பராமரிப்பு இல்லாமல் பாழடைந்து வருகிறது.

அரியலூர் -திருச்சி சாலையில், அரியலூர் புறவழிச்சாலை அருகே, ஆட்டோ எல்பிஜி கேஸ் விற்பனை நிலையம் எதிரே, தமிழக அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறைக்கான சார்-ஆட்சியர் குடியிருப்பு கட்டிடம், ரூபாய் 79.50 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டது. 2020 ஜூன் 1ஆம் தேதி, அப்போதைய தமிழக முதல்வராக இருந்த எடப்பாடி பழனிச்சாமி திறந்து வைத்ததாக, கல்வெட்டு ஒன்று கட்டடத்தின் நுழைவாயில் அருகே உள்ளது. திறப்பு விழாவை முன்னிட்டு, அப்போது அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த ரத்னா, மற்றும் வருவாய்த் துறையினர் உள்ளிட்ட அலுவலர்கள் பலரும் கலந்து கொண்ட விழா, அங்கு கோலாகலமாக நடத்தப்பட்டது.

ஆனால், அதன் பிறகு சார்- ஆட்சியர் நிலையில் உள்ள அரசு அலுவலர்கள் எவரும், அந்த கட்டிடத்தில் குடியிருக்க ஒதுக்கீடு செய்யப்படவில்லை. அதனால் அந்த கட்டிடம் போதிய பராமரிப்பு இல்லாமல் மரம், செடி கொடிகள், சூழ்ந்து, சுகாதாரக் கேடுகளுடன் காட்சி அளிக்கிறது. எனவே, பல லட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்ட அந்தக் கட்டிடத்தை, வருவாய் துறையில், சார்- ஆட்சியர் நிலையில் உள்ள உயர் அதிகாரி ஒருவருக்கு, குடியிருப்பு தளமாக மாற்றி, உரிய வகையில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள, அரியலூர் மாவட்ட ஆட்சியர் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என, பொதுமக்கள் பலரும் விரும்புகிறார்கள்.



பணி ஒய்வு பெற்று செல்லும் தமிழகத்தின் (முன்னாள் )தலைமைச் செயலாளர் இறையன்புவை வாசல் வரை வந்து வழி அனுப்பிய புதிய தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா,





காரைக்கால் மாவட்ட ஆட்சியரகத்தில் கணக்கு அதிகாரியாக பணியாற்றிய இந்திராணி நேற்று பணி ஓய்வு பெறுவதை முன்னிட்டு அவருடைய பணிக்காலத்தில் சிறப்பாக செயல்பட்டதை நினைவு கூறும் வகையில் நேற்று அவருக்கு பணி ஓய்வு பாராட்டு விழா நிகழ்வு பயிற்சி ஆட்சியர் சம்யக் எஸ்.ஜெயின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் துணை ஆட்சியர் பாஸ்கரன் மற்றும் கோயில் நிர்வாக அதிகாரி அருணகிரிநாதன் ஆட்சியரின் செயலர் பாலு (என்கிற) பக்கிரிசாமி மற்றும் அரசு அதிகாரிகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் பணி ஓய்வு பெரும் இந்திராணி மற்றும் கணவர் , குடும்பத்தார் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள். மேலும் அவர்களுடைய பணியை பாராட்டும் வகையில் அனைவரும் வாழ்த்தி பேசினார்கள். 37 ஆண்டு காலம் இவர்கள் அரசுத்துறையில் பணியாற்றியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இன்நிகழ்வில் அவருடைய 37 ஆண்டுகால பணிக்காலத்தை நினைவு கூறும் வகையில் வாழ்த்தி பேசினார்.



கிருஷ்ணகிரி நகராட்சி, காந்தி ரோடு உழவர் சந்தையில் விவசாயிகளிடம் காய்கறி விற்பனை மற்றும் நுகர்வோர் வருகை குறித்து கலெக்டர் கே.எம்.சரயு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு அண்ணா திமுக புறநகர் கிழக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு மற்றும் பவானி தெற்கு ஒன்றிய பாசறை சார்பில், கவுந்தப்பாடி ஊராட்சிக்கு உட்பட்ட நல்லிக்கவுண்டனூர் அரசு பள்ளியில் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு முன்னாள் அமைச்சர் கே.சி. கருப்பணன் புத்தகப் பைகளை வழங்கினார். அருகில், தகவல் தொழில்நுட்பப் பிரிவு மாவட்டச் செயலாளர் நல்லி விவேகானந்தன், கவுந்தப்பாடி ஊராட்சி மன்ற தலைவர் பாபா தங்கமணி உள்பட பலர் உள்ளனர்.



தென்காசி மாவட்டம் புளியங்குடியில் டி.எம். எஸ். அறக்கட்டளை மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளிகளின் சிறப்புப் பள்ளியில், புளியங்குடி திமுக நகரச் செயலாளர் எ. அந்தோணிசாமி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர், இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் நடிப்பில் வெளிவந்த மாமன்னன் திரைப்படம் வெற்றி பெற 100 மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கினார், நிகழ்ச்சியில் டி. எம். எஸ். அறக்கட்டளை நிர்வாகி மாரியப்பன், பீர் ஒலி, மைதீன், பரமசிவம் மற்றும் அறக்கட்டளையின் ஆசிரியைகள் கலந்து கொண்டனர்.

# சென்னை திருவொற்றியூர் அம்மன் கோவிலில் 17 ஆண்டுகளுக்குப் பிறகு கொடியேற்றம்

திருவொற்றியூர், ஜூலை,1

திருவொற்றியூர் காலடிப்பேட்டை பகுதியில் பழமை வாய்ந்த திரௌபதி அம்மன் தர்மராஜா கோவிலில் 17 ஆண்டுகளுக்குப் பிறகு வசந்த உற்சவம் தொடங்கியது இதில் தினமும் மகாபாரத சொற்பொழிவு நடைபெறுகிறது 18 நாட்கள் நடைபெறும் வசந்த உற்சவத்தில் இரவு நேரத்தில் தெருக்கூத்து நாடகம் நடைபெறுகிறது.

இதனை அடுத்து தினமும் போத்த ராஜா நான்கு மாட வீதிகளிலும் ஊர்வலமாக வலம் வருகிறார், கண்ணன் அவதாரம் ,ஜலக்கிரிடை ,அரக்கு மாளிகை தகனம் ,திரௌபதி கல்யாணம், சுபத்திரை மாலையிடுதல், துகிலுரித்தல், அர்ஜுனன் தபசு, என ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அலங்காரத்தில் உற்சவம் நடைபெறுகிறது.

உற்சவத்தின் முதல் நாளான நேற்று காலை கொடி மரத்திற்கு பட்டாச்சாரியார்கள் பால் அபிஷேகம் சந்தன அபிஷேகம் இளநீர் அபிஷேகம் செய்யப்பட்டு சிறப்பு பூஜைகள் செய்த பின்பு நாதஸ்வரம் மேளதாளங்கள் பம்பை உடுக்கை முழங்க கொடியேற்றப்பட்டன கோவில் கொடியேற்று நிகழ்ச்சியில் சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்

# சென்னையில் ஆட்டோவில் தவறவிட்ட 12 சவரன் நகையை காவல் நிலையத்தில் ஒப்படைத்த ஆட்டோ ஓட்டுநர்



சென்னை, ஜூலை.1–

விருதுநகர் மாவட்டம் முத்தமிழ் வீதி 2 குறுக்கு தெருவைச் சேர்ந்த பகுதியை சேர்ந்தவர் புஷ்பா (35) இவர் நேற்று முன்தினம் சென்னை தண்டையார் பேட்டையில் உள்ள தனது உறவினர் திருமணத்திற்கு பங்கேற்பதற்காக வந்துள்ளார்.

திருமண நிகழ்ச்சி முடித்துக் கொண்டு மீண்டும் ஊருக்கு செல்வதற்காக தான் அணிந்து வந்திருந்த 7 சவரன் ஆரம் 5 சவரன் நெக்லஸ் உள்ளிட்ட 12 சவரன் தங்க நகைகளை பெட்டியில் வைத்து பையில் வைத்துள்ளார்.

இதனையடுத்து கொருக்குப்பேட்டை மணலி சாலை மூப்பனார் நகர் பகுதியில் இருந்து ரமேஷ் என்பவர் ஆட்டோவில் ஏறி கையில் வைத்திருந்த பையை ஆட்டோ பின் பக்கத்தில் வைத்து விட்டு தண்டையார்பேட்டை மெட்ரோ நிலையம் வந்து அங்கிருந்து சென்ட்ரலுக்கு சென்றுள்ளார்.

சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இறங்கி பார்த்தபொழுது பையை காணாதது கண்டு அதிர்ச்சடைந்தார், பின்னர் இரவு முழுவதும் தேடியும் கிடைக்காததால் தண்டையார்பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர்.

புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து சம்ப இடத்திற்கு விரைந்து சென்று அப்பகுதியில் பொருத்தப்பட்டு இருந்த சிசிடிவி கேமிரா காட்சிகளை தண்டையார்பேட்டை குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் முருகானந்தம் ஆய்வு செய்து விசாரணை மேற்கொண்டு வந்தார், இதனை அடுத்து நேற்று காலை தண்டையார்பேட்டை காவல் நிலையத்தில் ஆட்டோ ஓட்டுனர் ரமேஷ் ஆட்டோவில் தவர விட்ட பையில் இருந்த 12 சவரன் நகையை காவல் நிலையத்தில் கொண்டு வந்து ஒப்படைத்தார்.

இதனை அடுத்து போலீசார் புஷ்பாவை காவல் நிலையத்துக்கு வரவழைத்து நகைகளை ஒப்படைத்தார் 12 சவரன் நகையை நேர்மையாக ஒப்படைத்த ஆட்டோ ஓட்டுனர் ரமேஷ்க்கு காவல் ஆய்வாளர் முருகானந்தம் சால்வை அணிவித்து பாராட்டினார்

## ஆத்துப்பாக்கம் கிராமத்தில் பட்டப்பகலில் விவசாயி வீட்டின்

# பூட்டை உடைத்து ரூ.10 லட்சம் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது



ஊத்துக்கோட்டை, ஜூலை.1–

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், ஆத்துப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்தவர் துரைகண்ணு (வயது 57) விவசாயி ஆவார். இவரது வீட்டின் அருகே தர்மராஜா கோவில் உள்ளது.

இக்கோவிலை புணரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில், நேற்று மதியம் இக்கோவிலில் பணியாற்றுபவர்களுக்கு மதிய உணவு வாங்கி வர வீட்டை பூட்டிக்கொண்டு துரைக்கண்ணு தனது மோட்டார் சைக்கிளில் பெரியபாளையம் சென்றார். பணியாளர்களுக்கு தேவையான சாப்பாடு, தண்ணீர் உள்ளிட்டவர்களை வாங்கிக் கொண்டு வந்து பணியாளர்களுக்கு வழங்கினார்.

பின்னர், தனது வீட்டிற்கு வந்தபோது அவருக்கு அதிர்ச்சி காத்துக்கொண்டிருந்தது. வீட்டின் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே புகுந்த மர்ம நபர்கள் பீரோவை உடைத்து அதிலிருந்து ரொக்க பணம் ரூ.10 லட்சத்தை கொள்ளையடித்துக் கொண்டு சென்றதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார். இச்சம்பவம் குறித்து உடனடியாக பெரியபாளையம் காவல் நிலையத்தில் புகார் செய்தார். ஊத்துக்கோட்டை துணை போலீஸ் சூப்பிரண்டு கணேஷ் குமார் தலைமையில் பெரியபாளையம் காவல் நிலைய போலீஸ் இன்ஸ்பெக்டர் வெங்கடேசன் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். கொள்ளைச் சம்பவம் நடைபெற்ற வீட்டில் விசாரணை மேற்கொண்டனர்.

துரைக்கண்ணு நிலம் வாங்க பணத்தை சேகரித்து வந்து பீரோவில் வைத்துள்ளார் என்பதை அறிந்த யாரோ? ஒருவர்தான் இந்தக் கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டு இருக்கலாம்! என்பது உள்ளிட்ட பல்வேறு கோணங்களில் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். பட்டப் பகலில் விவசாயி வீட்டின் பீரோவை உடைத்து பணத்தை கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் இப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



கோவை மாநகராட்சி பிரதான அலுவலக வளாகத்தில் உள்ள விக்டோரியா ஹால் கூட்டரங்கில் மாமன்ற சாதாரணக் கூட்டம் மேயர் கல்பனா தலைமையில் நடைபெற்றது. உடன், மாநகராட்சி கமிஷனர் மு.பிரதாப், துணை மேயர் ரா.வெற்றிசெல்வன், துணை கமிஷனர் க.சிவகுமார், மாநகரப் பொறியாளர் சுகந்தி, மண்டல குழுத்தலைவர்கள், நிலைக்குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மண்டல உதவி ஆணையர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஆலங்குடி அருகே விநாயகர் கோவில் கும்பாபிஷேக விழா



ஆலங்குடி, ஜீலை.01-

ஆலங்குடி அருகே மேலப்புள்ளான்விடுதி கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலய மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமிதரிசனம் செய்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே உள்ள மேலப்புள்ளான்விடுதி கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலய மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது.

மங்கல இசையுடன் தொடங்கிய விழாவில் விக்னேஷ்வர பூஜை,வாஸ்து சாந்தி, லெட்சுமி பூஜை,கோ பூஜை உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. இதனை தொடர்ந்து முதலாம், இரண்டாம், மூன்றாம் காலயாகசாலைபூஜைகள் நடைபெற்றன. பல்வேறு புனிதத்தலங்களில் இருந்து கொண்டுவரப்பட்டு யாகசாலையில் வைத்து பூஜிக்கப்பட்ட புனிதநீரை மங்கல இசையுடன் சிவாச்சாரியார்கள் தலையில் சுமந்து கோவிலைசுற்றிவலம்வந்து கோவில் விமானத்தை அடைந்தனர். அப்போது கருடபகவான் கலசத்தை சுற்றிவர புனிதநீர் விமான கும்பத்தில் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

கும்பாபிஷேகத்தை பிரபாகரன் சிவாச்சாரியார் நடத்தி வைத்தார், விழாவில் புள்ளான்விடுதி சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர். தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதானம் நடைபெற்றது. பாதுகாப்பு ஏற்பாடுகளை வடகாடு போலீசார் செய்திருந்தனர்.

# தமிழ்நாடு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் சங்கத்தின் மாநிலத் தலைவருக்கு அமைச்சர் மெய்யநாதன் வாழ்த்து



புதுக்கோட்டை, ஜூலை.1-

தமிழ்நாடுமேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் சங்கத்தின் மாநிலத்தலைவராகஎஸ். தங்கமணி ஜூன் 25 ஆம் தேதி பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்நிலையில் தமிழ்நாடு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் சங்கத்தின் மாநிலத் தலைவராக பொறுப்பேற்றுக் கொண்ட எஸ். தங்கமணி சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பொன்னாடை போர்த்தி பாராட்டியதுடன் பணி சிறக்கவாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

இந்நிகழ்வில் முன்னாள் திமுக நகர கழக செயலாளர் நைனா முகமது, திமுக மாவட்ட அமைப்பாளர் (நெசவாளர் அணி) எம்.எம் .பாலு , புதுக்கோட்டை கல்வி மாவட்ட பள்ளித்துணை ஆய்வாளர்குருமாரிமுத்து, சுற்றுச்சூழல் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சாலை செந்தில், முதன்மை கல்வி அலுவலக பள்ளி துணை ஆய்வாளர் வேலுச்சாமி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி பேரூராட்சி, போறையாரில் உள்ள தவசுமுத்து நாடார் மேல்நிலைப் பள்ளியில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 121வது பிறந்த நாளை முன்னிட்டு பள்ளி கல்லூரி மாணவ மாணவியருக்கான பேச்சுப்போட்டி நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும் மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமன நிவேதா எம்.முருகன் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி மாணவர்களின் முன்னேற்றம் மற்றும் விடாமுயற்சி, வெற்றியின் முக்கியத்துவத்தை பற்றி விரிவாக எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார். இதில் தரங்கை பேரூராட்சி மன்ற தலைவர் சுகுணசங்கரி குமரவேல் பேரூராட்சி கவுன்சிலர்கள் மற்றும் திமுக நிர்வாகிகள் பல உடன் இருந்தனர்.




வாணியம்பாடி ஆலங்காயம் சாலையில் நிம்மியம்பட்டு ஏரிக்கரை பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட வரும் தார் சாலை பணிகளை வாணியம்பாடி சட்டமன்ற உறுப்பினர் கோ.செந்தில்குமார் பார்வையிட்டார். முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் பாரதிதாசன், ராமசாமி, சிவானந்தம், செல்வராஜ் உட்பட பலர் உள்ளனர்.

# கச்சத்தீவு மீண்டும் இந்தியாவுக்கு கைமாறுமா?

ராமேசுவரம் , ஜூலை.1-

இந்தியாவிடமிருந்த கச்சத்தீவு இலங்கைக்கு கைமாறி ஜூன் 28-ம் தேதியுடன்49ஆண்டுகளை நிறைவுசெய்கிறது. அத்தீவைமீண்டும்இந்தியா தன்வசப் படுத்துமா? என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.



ராமேசுவரத்திலிருந்து 12 கடல் மைல் தொலைவிலும்,இலங்கை நெடுந்தீவிலிருந்து 8 கடல் மைல் தொலைவிலும், பாக் நீரிணையில் அமைந்துள்ளது கச்சத்தீவு. இதன் மொத்த பரப்பளவு 285 ஏக்கர். இதன் அதிகபட்ச அகலமே 300 மீட்டர்தான். ராமேசுவரத்திலிருந்து சுமார் இரண்டரை மணி நேரத்திலும்,இலங்கையின் நெடுந்தீவு மற்றும் தலைமன்னாரிலிருந்து சுமார் ஒன்றரை மணி நேரத்திலும் இத்தீவை படகுமூலம் அடையலாம்.

ராமநாதபுரம் சேதுபதி மன்னர்களுக்குச் சொந்தமான கச்சத்தீவை, மண்டபத்தைச் சேர்ந்த மரைக்காயர்கள் குத்தகைக்கு எடுத்து, முத்துக்கள் மற்றும் மீன்பிடிப்புக்காகப் பயன்படுத்தி வந்தனர். 1972-ல் தமிழக அரசால் பதியப்பட்டராமநாதபுரம் மாவட்ட கெஸட்டியரில், கச்சத்தீவை ஒருங்கிணைந்த ராமநாதபுரம் மாவட்டத்தின் ஒரு பகுதியாகவும், இத்தீவின் சர்வே எண் 1250 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தாரை வார்ப்பு: 1974 ஜூன் 28 அன்று இந்திய - இலங்கை அரசுகளுக்கு இடையே ஒரு ஒப்பந்தம் கையெழுத்தானது. அதில், இரு நாடுகளுக்கும் இடையிலான கடல் எல்லைக் கோடு வரையறுக்கப்பட்டது. இதன்மூலம் கச்சத்தீவு இலங்கைக்கு தாரைவார்க்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில், இந்திய மீனவர்களின் மீன்பிடிக்கும் உரிமையும், கச்சத்தீவு அந்தோணியார் ஆலயத்துக்கு பக்தர்கள் பாஸ் போர்ட், விசா உள்ளிட்ட ஆவணங்கள் இன்றி சென்றுவரும் உரிமையும் குறிப்பிடப்பட்டிருந்தன.

கச்சத்தீவு கைமாறி 50 ஆண்டுகளான நிலையில், இலங்கையிடமிருந்து கச்சத்தீவை மீட்பது குறித்து ஏஐடியுசி மீனவர் சங்கமாநிலச் செயலாளர் செந்தில்வேல் கூறியதாவது : கச்சத்தீவு இலங்கைக்கு தாரைவார்க்கப்பட்ட கடந்த 49 ஆண்டுகளில், இந்திய- இலங்கை சர்வதேச கடல் எல்லையைத் தாண்டியதாக, இதுவரை 360 தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

# ஜூலை 5-ம் தேதி மாவட்ட செயலாளர்கள் கூட்டம் - அதிமுக அறிவிப்பு

சென்னை , ஜூலை.1-

தமிழ்நாட்டில் பரபரப்பான அரசியல் சூழல் நிலவி வரும் நிலையில் வருகின்ற 5 ஆம் தேதி அதிமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடைபெறவுள்ளதாக அதிமுக தலைமை அறிவித்துள்ளது.

இதுதொடர்பாகஅதிமுக வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில், அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில், தலைமைக் கழகசெயலாளர்கள் மற்றும் மாவட்டசெயலாளர்களின் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜூலை 5 ஆம் தேதி காலை9மணிக்குசென்னை ராயப்பேட்டையில் உள்ள கட்சித் தலைமையகத்தில் நடைபெறும் இந்த கூட்டத்தில் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டு உள்ளது. இந்த கூட்டத்தில் மக்களவைத் தேர்தல் தொடர்பாகவும்,அதற்கான முன்னெடுப்புகள் குறித்தும் ஆலோசிக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேலும்,தமிழ்நாடு அரசு -ஆளுநர்மோதல்விவகாரம் விஸ்வரூபம் எடுத்துள்ள நிலையில், அதிமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# புதுக்கோட்டையில் சிட்டி ரோட்டரி சங்க 9ஆம் ஆண்டு துவக்க நாள் விழா



புதுக்கோட்டை, ஜூலை.1-

புதுக்கோட்டை சிட்டி ரோட்டரி சங்க 9வது ஆண்டு துவக்க நாள் விழா தனியார் ஓட்டலில் சங்கத் தலைவர் அசோகன் தலைமையில் நடைபெற்றது முன்னதாக வருகை தந்த அனைவரையும் சங்க ஆலோசகரும், மேலாண்மை செயலாளருமான மாருதி கண. மோகன்ராஜா வரவேற்றுப் பேசினார்.

நிகழ்ச்சியில் குழிபிறை ஊராட்சிமன்றத்தலைவர் அழகப்பன் தொகுத்து வழங்கினார், மண்டல ஒருங்கிணைப்பாளர் ஆரோக்கியசாமி, வழக்கறிஞர் சந்திரசேகரன், மேனாள் தலைவர்கள் மாரிமுத்து, சிவக்குமார், தனகோபால், பார்த்திபன், வாழ்த்துரை வழங்கினர் வேலை சிட்டி ரோடு சங்க மேனாள் தலைவர் வீரன், மிட்டவுன் ரோட்டரி சங்க மேனாள் தலைவர் ராஜேந்திரன், இளைஞர்கள் சேவை சேர்மன் சண்முகவேல், சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு புதுக்கோட்டையில் சிறப்பாக இரத்த தான சேவையினை செய்து வரும் ஆத்மா ரத்த வங்கிக்கு விருதும், வல்லத்திராக்கோட்டை இரா.அ. அரசு மேல்நிலைப்பள்ளி த. தமிழமுது என்ற மாணவி 500/487 என்ற அளவில் அதிக மதிப்பெண்களை பெற்றதை பாராட்டி சான்றிதழும் விருதும் வழங்கினர், துவக்கநாளை முன்னிட்டு கேக் வெட்டி கொண்டாடப்பட்டது, வருகை தந்த அனைவரையும் செயலாளர் முத்தன் அரசகுமார் நன்றி கூறினார்.

# பெற்றுக் கொள்ளும் ஒவ்வொரு குழந்தைக்கும் ரூ.5.66 லட்சம் ஊழியர்களுக்கு இன்ப அதிர்ச்சி கொடுத்த சீன நிறுவனம்

சீனா, ஜூலை.1-

இந்த திட்டத்திற்கு சுமார் 1 பில்லியன் யுவான் செலவாகும் என்றும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.



சீனாவில் குழந்தைகள் பிறப்பு விகிதம் 1000 பேருக்கு 6.77 என்ற அளவில் குறைந்துள்ளது. சீனாவில் மக்கள் தொகை பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக 1980 முதல் 2015 வரை "ஒரு குழந்தை கொள்கை" நீடித்தது. இதனால் தம்பதியினர் ஒரு குழந்தைக்கு மேல் பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படவில்லை. மக்கள் தொகை வல்லுநர்கள், இந்த கொள்கை அமல்படுத்தப்பட்ட போதேஇதன் விளைவாக, சீனா ஒரு பணக்கார நாடாக ஆவதற்கு முன்பே, "வயதாகி விடும்" என்று எச்சரித்து வந்தனர். அது தற்போது உண்மையாகி வருகிறது. ஏனெனில், அங்கு தற்போது இளம்வயது பணியாளர்கள் கிடைப்பது அரிதாகி வருகிறது.

மேலும், கடன்பட்டுள்ள உள்ளூர் அரசாங்கங்கள் முதியோர்களை கவனிக்க இளம்வயதினர் அதிகம் இல்லாததால், அவர்களுக்காக அதிகம் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. இந்நிலையில் ட்ரிப்.காம் எனும் இணையதள வர்த்தக குழுமம், வரும் ஜூலை 1 முதல், தனது பணியாளர்கள் குழந்தை பெற்றுக்கொள்வதை ஊக்குவிக்கும் வகையில் வெகுமதியை அறிவித்துள்ளது. அதாவது, பெற்றுக் கொள்ளும் ஒவ்வொரு குழந்தைக்கும் சுமார் ரூ.5,66,000 ($6,897.69) வழங்கப்போவதாக கூறியிருக்கிறது. "அதிகளவு முதியோர்கள், குறைந்தளவு இளைஞர்கள்" என்ற ஒரு ஏற்றத்தாழ்வான நிலையுடன் போராடும் சீனாவில் இந்த நிலையை எதிர்கொள்ள செய்வதற்காக பெரிய தனியார் நிறுவனம் செய்யும் முதல் முயற்சியாகும். 400 மில்லியன் பயனர்களைக் கொண்ட உலகின் மிகப்பெரிய ஆன்லைன் பயண முகவர் நிறுவனங்களில் ஒன்றான இந்நிறுவனம், உலகெங்கிலும் உள்ள தனது ஊழியர்களுக்கு பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் 5 ஆண்டுகளுக்கு ஆண்டுதோறும் சுமார் ரூ.1,14,000 ரொக்க மானியமாக வழங்குவதாகக் கூறியிருக்கிறது

# காகிதக் குடுவைகளில் மது வழங்கும் திட்டத்தை அரசு கைவிட அன்புமணி வலியுறுத்தல்

சென்னை , ஜூலை.1-

மது வணிகம் அதிகரிக்க மட்டுமே வழி வகுக்கும் காகிதக் குடுவைகளில் மது விற்கும் திட்டத்தை கைவிட வேண்டும் என்று பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாட்டில் அரசு மதுக்கடைகளில் 90 மி.லி அளவில் காகிதக் குடுவைகளில் மதுவை விற்பனை செய்ய திட்டமிட்டிருப்பதாக மதுவிலக்குத்துறை அமைச்சர் முத்துசாமி கூறியிருக்கிறார். இது தொடர்பாக கடந்த சில நாட்களுக்கு முன் டாஸ்மாக் தலைமை அலுவலகத்தில் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றதாகவும், ஆனால், அதில் முடிவு எடுக்கப்படவில்லை என்றும் தெரிகிறது. காகிதக் குடுவைகளில் மது விற்க அரசு தீர்மானித்தால் அது மிக மோசமான முடிவாக இருக்கும்; அது கண்டிக்கத்தக்கது.

காகிதக் குடுவைகளில் மது விற்பனை செய்வதற்காக அரசுத் தரப்பில் கூறப்படும் காரணங்கள் ஏற்கத்தக்கதல்ல. கண்மூடித்தனமாக சாலைகளிலும், தெருக்களிலும், வனப்பகுதிகளிலும் வீசப்படும் மதுப்புட்டிகளால் சுற்றுச்சூழலுக்கு தீங்கு ஏற்படுவதாகவும், அதைத் தடுக்கவே காகிதக் குடுவைகளில் மது விற்பனை செய்யப்பட விருப்பதாகவும் கூறப்படுகிறது.

ஒரு பாட்டில் மதுவை இருவர் பகிர்ந்து குடிக்கும் போது அதில் நஞ்சு கலக்கப்படும் வாய்ப்பு இருப்பதால் அதை தவிர்க்கவே 90 மிலி குடுவைகளில் மது வணிகம் செய்யப்படவுள்ளதாக அமைச்சர் முத்துசாமி கூறியிருக்கிறார். இந்த விளக்கங்கள் விந்தையாக உள்ளன. மது வணிகத்தில் மட்டுமே தமிழக அரசு புதுமைகளை புகுத்துகிறது.

கண்ணாடிகளால் ஆன மதுப்புட்டிகளை குடிகாரர்கள் வனப்பகுதிகளிலும், நீர்நிலைகளிலும் வீசிச் செல்வது தடுக்கப்பட வேண்டிய ஒன்று தான். அதற்கானத்தீர்வுமதுவிலக்கை நடைமுறைப்படுத்துவது தானே தவிர, காகிதக் குடுவைகளில் மது விற்பனை செய்வது அல்ல. சுற்றுச்சூழல் பாதுகாப்பு சார்ந்து சிந்தித்தால், கண்ணாடிகளால் ஆன மதுப்புட்டிகளை விட காகிதக் குடுவைகள் ஆபத்துக் குறைந்தவை தான் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.



ஆனால், இப்போது விற்பனை செய்யப்படும் அளவுகளிலான மது வகைகள் தொடர்ந்து கண்ணாடிக் குடுவைகளில் மட்டுமே விற்பனை செய்யப்படும் என அறிவித்துள்ள அரசு, புதிதாக 90 மி.லி. என்ற அளவில் மட்டுமே காகிதக் குடுவைகளில் மது வணிகம் செய்யப்படும் என்று அறிவித்திருக்கிறது. தமிழக அரசின் நோக்கம் சுற்றுச்சூழலை பாதுகாப்பது அல்ல... புதுப்புது அளவுகளில் மது வகைகளை அறிமுகம் செய்வது தான் என்பதை இதிலிருந்தே புரிந்துகொள்ள முடியும்.

90 மிலி காகிதக் குடுவை மது ரூ.70 என்ற அளவில் விற்கப்படவிருப்பதாக கூறப்படுகிறது. ரூ.70 என்பது மிகவும் எளிதாக திரட்டப்படக் கூடியது. அதுமட்டுமின்றி காகிதக் குடுவைகளில் விற்கப்படும் மது, மில்க் ஷேக், பழச்சாறுகள் போன்றவற்றைப் போலவே தோற்றமளிக்கக்கூடியது என்பதால் சிறுவர்களோ, மாணவர்களோ காகிதக் குடுவைகளில் மது அருந்தினால் கூட அவற்றை மற்றவர்களால் எளிதாக கண்டுபிடிக்க முடியாது. அதனால், அவர்கள் அச்சமின்றி மது அருந்தக் கூடிய நிலை ஏற்படும். காகிதக் குடுவைகளினால் ஆன மது வகைகள் சிறுவர்களை கவர்ந்திழுக்கும் ஆபத்தும் உள்ளது.

மதுக்குடிப்பகங்களில் 180 மிலி மதுப்புட்டிகளை இருவருக்கு பகிர்ந்து கொடுப்பதால், அதில் நஞ்சு கலக்கப்பட வாய்ப்பு இருப்பதாக அமைச்சர் முத்துசாமி அவர்கள் கவலை தெரிவித்திருக்கிறார். மது குடிப்பகங்களில் மது விற்பனை செய்யப்படுவதே குற்றம். அதை உணர்ந்து கொண்டு குடிப்பகங்களில் மது விற்கப்படுவதை தடுப்பது தான் சிக்கலுக்குத் தீர்வே தவிர, 90 மி.லி அளவில் பிரித்து விற்பது அல்ல.

அமைச்சர் முத்துசாமி அவர்கள் நீண்ட அனுபவம் பெற்றவர். தமிழ்நாட்டின் சுகாதாரத்துறை அமைச்சராக ஐந்தாண்டுகள் முழுமையாக பதவி வகித்தவர். போக்குவரத்துத் துறை அமைச்சராக பொறுப்பு வகித்த போது, அத்துறை பணியாளர்களின் நலனுக்காக மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி போன்ற கல்வி நிறுவனங்களைத் தொடங்கியவர். மதுவிலக்குத்துறை அமைச்சராக அவர் நியமிக்கப்பட்டவுடன், அவர் தமிழ்நாட்டை மதுவிலக்கை நோக்கி அழைத்துச் செல்வார் என்று நான் நம்பினேன்.

ஆனால், இதற்கு முன் அமைச்சராக இருந்த செந்தில் பாலாஜி, தானியங்கி மதுப்புட்டி வழங்கும் எந்திரங்களை நிறுவியதைப் போன்று, 90 மிலி மது அறிமுகம் செய்யும் முயற்சியில் முத்துசாமி அவர்களும் ஈடுபட்டு வருகிறார். அவரிடமிருந்து தமிழ்நாட்டு மக்கள் எதிர்பார்ப்பது இதை அல்ல.... மதுவிலக்கை மட்டுமே.

தமிழ்நாட்டில் கடந்த 1989, 2002 ஆகிய ஆண்டுகளில் மலிவு விலை மது என்ற பெயரில் 100 மி.லி மது வகைகள் அறிமுகம் செய்யப்பட்டு பொதுமக்களின் எதிர்ப்புக்குப் பிறகு திரும்பப் பெறப்பட்ட வரலாறு உண்டு. இப்போது 90 மி.லி மது மீண்டும் அறிமுகம் செய்யப்பட்டால் பழைய வரலாறு மீண்டும் திரும்பும். அதற்கு வாய்ப்பளிக்காமல் காகிதக் குடுவைகளில் 90 மி.லி மது வகைகளை அறிமுகம் செய்யும் திட்டத்தை தொடக்க நிலையிலேயே அரசு கைவிட வேண்டும் என வலியுறுத்துகிறேன்'' என்று அன்புணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# திமுக எம்எல்ஏவுக்கு சொந்தமான கல்குவாரியில் முறைகேடு 24 கோடி அபராதம்

# செந்தில்பாலாஜி விவகாரம் : ஆளுநரின் முடிவை தமிழக அரசு முற்றிலுமாக நிராகரிக்கிறது





# 5ம் தேதி அதிமுக மா.செ.கூட்டம் அறிவித்தார் பொ.செயலாளர்


| சென்னை / புதுக்கோட்டை | 01.07.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்


**பிதான் சந்திர ராய்** , மேற்கு வங்கத்தின் 2வது முதலமைச்சர் (பி.1882) (இ.1962)



**புலவர் குழந்தை** , தமிழகத் தமிழறிஞர், புலவர் (பி.1906) (இ.1972)



**சந்திரசேகர்** , இந்தியாவின் 11வது பிரதமர் (பி.1927) (இ.2007)



**வெங்கையா நாயுடு** , இந்திய அரசியல்வாதி (பி.1949)



## இன்றைய நினைவு நாள்

**புருசோத்தம் தாசு தாண்டன்** , இந்திய அரசியல்வாதி (பி.1882) (இ.1962)



**பிதான் சந்திர ராய்** , மேற்கு வங்கத்தின் 2வது முதலமைச்சர் (பி.1882) (இ.1962)



**கா. கோவிந்தன்** , தமிழக அரசியல்வாதி, எழுத்தாளர் (பி.1915) (இ.1991)

